LECS®

# LAKSHMI ELECTRICAL CONTROL SYSTEMS LIMITED

CIN: L31200TZ1981PLC001124

Regd. Office : 34-A, Kamaraj Road, Coimbatore - 641018.

Ph : 0422 - 3093500 Fax : 0422 - 3093555

Website: www.lecsindia.com E-mail : lecs@vsnl.com

## NOTICE TO MEMBERS

Notice is hereby given that:

1) 37th Annual General Meeting (AGM) of Members of Lakshmi Electrical Control Systems Limited will be held at 3.00 P.M on Wednesday, the 8th August 2018 at "Nani Kalai Arangam", Mani Higher Secondary School, Pappanaickenpalayam, Coimbatore - 641 037. The Annual Report including Notice of AGM and Explanatory Statement has been posted/e-mailed to the members and is also available in the Company's website: www.lecsindia.com and the agency's website:www.cdslindia.com.

2) transaction of all the business at the AGM through remote E-voting is arranged to the Members through Central Depository Services (India) Limited. The remote E-Voting will be available from 9.00 AM (IST) on 05.08.2018 to 5.00 PM (IST) on 07.08.2018. This facility will not be available thereafter. The procedure for remote e-voting is provided in the notice of AGM.

3) voting through Ballot will also be arranged for the members/proxies at the AGM. A Member who has voted through remote e-voting may attend the AGM but is not eligible to vote by Ballot at the AGM.

4) the cut-off date for reckoning the eligibility of members for voting is: 01.08.2018. Any person holding shares in the Company at the close of business hours on the cut-off date alone is eligible for voting through remote e-voting or by Ballot at the AGM.

5) any person who has acquired shares after the dispatch of the notice may obtain the user ID and Password by sending an e-mail request to: helpdesk.evoting@cdslindia.com or info@skdc-consultants.com.

6) for any queries/clarifications please contact: Mr. K. Marimuthu, Senior Executive-Operation, M/s. S.K.D.C. Consultants Limited, Kanapathy Towers, 3rd Floor, 1391/A-1, Sathy Road, Ganapathy, Coimbatore - 641 006, Phone No.0422 4958995, E-Mail: info@skdc-consultants.com.

Notice is further given that the Register of Members and Share Transfer Books of the Company will remain closed from Thursday, the 02.08.2018 to Wednesday, the 08.08.2018 (both days inclusive) for AGM and payment of Dividend. Dividend for the year 2017-18, if declared at the AGM, will be paid to the members whose name appear on the Register of Members and to the beneficial owners of shares as per the details furnished by the Depositories, as the case may be, as at the close of the business hours on 01.08.2018.

Notice is further given, pursuant to Regulation 47 (1) (a) of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, that a meeting of Board of Directors of the Company is scheduled to be held on Wednesday, the 8th August, 2018, inter alia, to consider and take on record the unaudited financial results for the quarter ended 30.06.2018.The details of the notice are also available in the Company website: www.lecsindia.com and Stock Exchange Website:www.bseindia.com

By order of the Board

For **LAKSHMI ELECTRICAL CONTROL SYSTEMS LIMITED**

Coimbatore
11.07.2018

**S.SATHYANARAYANAN**
Company Secretary

---

LECS®

# லக்ஷ்மி எலக்ட்ரிக்கல் கண்ட்ரோல் சிஸ்டம்ஸ் லிமிடெட்

CIN: L31200TZ1981PLC001124

பதிவு அலுவலகம் : 34-A, காமராஜ் சாலை, கோயமுத்தூர்-641018

தொலைபேசி: 0422 - 3093500 பேக்ஸ்: 0422 - 3093555

இணையதளம்: www.lecsindia.com மின்னஞ்சல் : lecs@vsnl.com

## உறுப்பினர்களுக்கான அறிவிப்பு

இதன்மூலம் அறிவிப்பது என்னவென்றால்:

1. லக்ஷ்மி எலக்ட்ரிக்கல் கண்ட்ரோல் சிஸ்டம்ஸ் லிமிடெட்டின் உறுப்பினர்களின் முப்பத்தி ஏழாவது வருடாந்திர பொதுக் கூட்டம், புதன்கிழமை 08.8.2018 அன்று மாலை 3.00 மணிக்கு 'நானி கலையரங்கம்' மணி மேல்நிலைபள்ளி, பாப்பநாயக்கன்பாளையம் கோயம்புத்தூர் - 641037-இல் நடைபெற உள்ளது. தபால்/மின்னஞ்சல் வாயிலாக வருடாந்திர அறிக்கை, பங்குதாரர் பொது கூட்ட அறிவிப்பு மற்றும் விளக்க அறிக்கை ஆகியவை அனுப்பப்பட்டுள்ளன. மேலும் இந்த ஆவணங்கள் அனைத்தும் www.lecsindia.com என்ற கம்பெனியின் இணையத்தளத்திலும், பங்கு வைப்பகத்தின் இணையதளம் www.cdslindia.com-லும் பதிவேற்றப்பட்டுள்ளது.
2. வருடாந்திர பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்படவுள்ள அலுவல்கள் குறித்த தங்களின் வாக்குகளை தொலை மின்னணு வாக்கு மூலம் பதிவு செய்ய, சென்ட்ரல் டெபொசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட்-ன் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த தொலை மின்னணு வாக்கு வசதி 05.08.2018 அன்று காலை 9.00 மணிக்கு (இந்திய நேரம்) துவங்கி, 07.08.2018 மாலை 5.00 மணி (இந்திய நேரம்) வரை வாக்குகள் பதிவு செய்ய திறப்பிலிருக்கும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு பிறகு இந்த வசதி கிடைக்காது. தொலை மின்னணு அமைப்பின் வாயிலாக உறுப்பினர்கள் வாக்குகள் பதிவு செய்யும் முறை பற்றிய தகவல் வருடாந்திர பொது கூட்ட அறிவிப்பில் இடம்பெற்றுள்ளது.
3. வருடாந்திர பொது கூட்டத்தின் போது உறுப்பினர்கள்/பதிலிகள் வாக்குச் சீட்டின் வாயிலாக வாக்களிக்க ஏற்பாடு செய்யப்படும். வருடாந்திர பொதுக் கூட்டத்திற்கு முன்பே தொலை மின்னணு வாக்குபதிவு மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக் கூட்டத்தில் கலந்துக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் கூட்டத்தின் போது வாக்குச் சீட்டின் மூலம் வாக்களிக்க இயலாது.
4. உறுப்பினர்களின் வாக்குரிமையை நிர்ணயிக்கும் நாள் 01.08.2018 ஆகும். இந்த தேதியில் வேலை நேரமுடிவில் கம்பெனி பங்குகளை வைத்திருப்போர் மட்டுமே தொலை மின்னணு வாக்குப்பதிவு அல்லது வருடாந்திர பொதுக் கூட்டத்தில் நடத்தப்படவிருக்கும் வாக்குச் சீட்டு பதிவு ஆகிய ஏதேனும் ஒன்றில் பங்கேற்று வாக்களிக்கலாம்.
5. எவரேனும் வருடாந்திர பொதுக் கூட்டத்தின் அறிக்கை அனுப்பப்பட்ட பிறகு கம்பெனியின் பங்குகளை வாங்கியிருந்து வாக்கு உரிமம் நிர்ணயிக்கும் தேதியன்று உறுப்பினராக இருந்தால், அவர்கள் உள்நுழைவு பெயர்(ID) மற்றும் கடவுச்சொல்லை(Password), helpdesk.evoting@cdslindia.com அல்லது info@skdc-consultants.com என்ற மின்னஞ்சலுக்கு தமது கோரிக்கையை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.
6. உறுப்பினர்களுக்கு வேறு ஏதேனும் கேள்வி அல்லது விளக்கங்கள் தேவைப்பட்டால், திரு. K.மாரிமுத்து, சீனியர் எக்ஸ்க்யூடீவ்-ஆபரேசன், எஸ்.கே.டி.சி. கன்சல்டன்ட்ஸ் லிமிடெட், கணபதி டவர்ஸ், 3-ம் தளம், 1391/A-1, சத்தி சாலை, கணபதி, கோயம்புத்தூர்-641 006, தொலைபேசி : 0422 - 4958995, மின்னஞ்சல்: info@skdc-consultants.com என்ற முகவரியை தொடர்பு கொள்ளலாம்.

மேலும் உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், கம்பெனியின் உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்கு மாற்று புத்தகங்கள் வியாழக்கிழமை, 02.08.2018 முதல் புதன்கிழமை 08.08.2018 வரை (இரண்டு நாட்கள் உட்பட) கம்பெனியின் வருடாந்திர பொதுக் கூட்டம் மற்றும் ஈவுத் தொகை வழங்குவதற்காகவும் மூடப்பட்டிருக்கும். 2017-18 நிதியாண்டிற்கான ஈவுத் தொகை, பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டால், 01.08.2018 அன்று கம்பெனியின் உறுப்பினர் பதிவேட்டில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் மற்றும் 01.08.2018 அன்று வேலை நேரமுடிவில் பங்கு வைப்பகங்களில் இருந்து பெறப்படும் அனுபோக பங்கு உரிமையாளர் பட்டியலில் உள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.

2018 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 8ஆம் தேதி புதன்கிழமை நடைபெறவுள்ள இயக்குனர்கள் குழுக்கூட்டத்தில் மற்ற விஷயங்களுடன் 2018ஆம் வருடம் ஜூன் மாதம் 30ஆம் தேதியுடன் முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி நிலை அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு பதிவில் எடுத்துக் கொள்ளப்படும் என இந்திய காப்பாவணங்கள் மற்றும் பரிமாற்று வாரியம் (பட்டியல் கடமை மற்றும் வெளியீட்டுத் தேவை) ஒழுங்குமுறை, 2015, ஒழுங்குமுறை எண் 47(1)(a)ன் படி அறிவிக்கப்படுகிறது. மேலும் இந்த விபரங்களை நிறுவனத்தின் வலைதள முகவரி: www.lecsindia.com, பங்கு வர்த்தக வலைதள முகவரி: www.bseindia.com மூலமும் அறியலாம்

நிர்வாக குழு ஆணைப்படி

**லக்ஷ்மி எலக்ட்ரிக்கல் கண்ட்ரோல் சிஸ்டம்ஸ் லிமிடெட்டுக்காக**

கோயமுத்தூர்
11.07.2018

**S. சத்யநாராயணன்**
நிறுவனச் செயலாளர்